



# Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



## ஸத் ஸம்ப்ரதாயம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

## அருள் மொழிகள்



ஞான அக்னியானது கர்மாக்களின் பலன்களை எரிக்கவல்லது. பிறப்பும் இறப்பும் இருக்கும் வரை கஷ்டங்களும் துக்கங்களும் ஒருவனுக்கு இருந்துகொண்டேயிருக்கும். அவை இருக்கும் வரை முக்தி என்பதுமில்லை. எனவே, ஆத்மஞானமே முக்திக்கு வழி ஆதலால் அந்த ஞானம் மனிதனால் அடையப்பட வேண்டியதாகும். அப்பொழுதுதான் நமது வாழ்க்கை பூரணமடையும். அப்படிப்பட்ட ஞானம் அடைந்தவன் பிறப்பு-இறப்புக்களால் பாதிக்கப்படுவது இல்லை. அவன் முக்தனாகிறான். அப்படிப்பட்ட ஞானத்தை அடையாதவன் பந்தத்தில் சிக்கிக் கொள்கிறான். எனவே ஆத்ம ஞானம் அடைவதே நமது குறிக்கோளாக இருக்க வேண்டும்.

—ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹா ஸ்வாமிகள்


## सुभाषितानि
## நல்லுரைகள்

अनिर्वेदः श्रियो मूलम् । அநிர்வேத$^{3}$: ஶ்ரியோ மூலம் | = மனம் தளராதிருத்தல் மேன்மையின் வேர்.

अनुगन्तुं सतां वर्त्म कृत्स्नं यदि न शक्यते । स्वल्पमप्यनुगन्तव्यं मार्गस्थो नावसीदति । அனுக$^{3}$ந்தும்’ ஸதாம்’ வர்த்ம க்ரு’த்ஸ்ரம்’ யதி$^{3}$ ந ஶக்யதே | ஸ்வல்பமப்யனுக$^{3}$ந்தவ்யம்’ மார்க$^{3}$ஸ்தோ$^{2}$ நாவஸீத$^{3}$தி | = நல்லோர் சென்ற வழியை முழுவதும் பின் பற்றிச் செல்ல இயலாவிடில் சிறிதளவாவது அவ்வழியே செல்ல வேண்டும். அவ்வழியிலிருப்பவன் துயருறுவதில்லை.

अनुत्साहः सर्वव्यसनानां आगमनद्वारम् । அனுத்ஸாஹ: ஸர்வவ்யஸனானாம்’ ஆக$^{3}$மனத்$^{3}$வாரம் | = உற்சாகமின்மையே எல்லாதுன்பங்களுக்கும் நுழைவாயில்.


For free e magazine Our Mail ID : Info@voiceofjagadguru.com



# Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita




## ஸத் ஸம்ப்ரதாயம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

## விதுர நீதி

अष्टा विमानिहर्षस्य नवनीतानि भारत । वर्तमानानि दृश्यन्ते तान्येवस्वसुखान्यपि ॥
समागमश्चसखिभिः महांश्चैव धनागमः । पुत्रेण च परिष्वङ्गः सन्निपातश्चमैथुने ॥
समयेच प्रिया लापः खयूथ्येषु समुन्नतिः
। अभिप्रेतार्थ लाभश्च पूजाच जनसंसदि
॥५२॥



அஷ்டா விமானிஹர்ஷஸ்ய
நவனீதானி பா$^{4}$ரத | வர்தமானானி
த்$^{3}$ரு’ஶ்யந்தே
தான்யேவஸ்வஸுகா$^{2}$ன்யபி ||
ஸமாக$^{3}$மஶ்சஸகி$^{2}$பி$^{4}$:
மஹாம்’ஶ்சைவ த$^{4}$நாக$^{3}$ம: |
புத்ரேண ச பரிஷ்வங்க$^{3}$:
ஸன்னிபாதஶ்சமைது$^{2}$னே ||
ஸமயேச ப்ரியா லாப:
க$^{2}$யூத்$^{2}$யேஷு ஸமுன்னதி: |
அபி$^{4}$ப்ரேதார்த$^{2}$ லாப$^{4}$ஶ்ச பூஜாச
ஜனஸம்’ஸதி$^{3}$ ||52||

ஓ பரத சிரேஷ்டரே சந்தோஷத்தை அளிப்பதற்கு வெண்ணெய் போன்ற எட்டு வகைகளைச் சொல்கிறேன். அவை , ஸ்நேஹிதர்களின் சேர்க்கை, நிரம்ப பொருள் வருதல், தன் குழந்தையின் ஆலிங்கனம் அன்பு கொண்ட ஸ்திரீ புருஷர்களின் சேர்க்கை, நல்ல சமயத்தில் பிரியமாக பேசுதல், தனது வகுப்பினருக்குள் தலைமையாக இருத்தல், கோரிய பொருளை அடைதல், பெரிய கூட்டத்தில் பூஜயைப்பெறுதல் அவைகளே தனக்கு சுகத்தை அளிக்கின்றவைகளாகவும் இருக்கின்றன.

अष्टौगुणाः पुरुषं दीपयन्ति प्रज्ञाचकौल्यंच दमः श्रुतं च ।
पराक्रमश्चाऽबहुभाषिता च दानं यथाशक्ति कृतज्ञता च ॥
அஷ்டௌகு$^{3}$ணா: புருஷம்’ தீ$^{3}$பயந்தி ப்ரஜ்ஞாசகௌல்யஞ்ச த$^{3}$ம: ஶ்ருதம்’ ச |
பராக்ரமஶ்சா(அ)ப$^{3}$ஹுபா$^{4}$ஷிதா ச தா$^{3}$னம்’ யதா$^{2}$ஶக்தி க்ரு’தஜ்ஞதா ச ||52

மனிதனை பிரகாசப்படுத்தும் எட்டு குணங்கள், அறிவு நற்குலத்தில் பிறப்பு, அடக்கம், படிப்பு, பராக்ரமம், அதிகமாய் பேசாமலிருத்தல் தன் சக்திக்கு தக்க தானம் செய்தல் நன்றி மறவாமைஆகியவனை ஆகும்.

(தொடரும்....)

For free e magazine Our Mail ID : Info@voiceofjagadguru.com

## ஸத் ஸம்ப்ரதாயம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஆசார்யாளின் உபதேசங்கள்

(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாசஸ்வாமிகள் அருளியது)

### பாபங்கள் பத்து வகை

இன்னொருவன் நமக்குத் துரோகம் செய்தால் நம்மால் அதனைத் தாங்கிக்கொள்ள முடியாது. அப்படி இருக்கும் போது, நாம் மட்டும் இன்னொருவனுக்குத் துரோகம் செய்ய யோசிக்கலாமா? ஆசார்ய சங்கரர்,

த்வயி மயி சான்யக்ரைகோ விஷ்ணு:
வ்யர்த்தம் குப்யஸி மய்யஸஹிஷ்ணு: |



“உன்னிலும் என்னிலும் எல்லா இடத்திலும் ஒரே சைதன்யம்தான் பிரகாசமாய் விளங்குகின்றது. ஆகவே, எதற்காக என் மேல் கோபித்துக் கொள்கின்றாய்?" என்று சொன்னார். நான் என்ன அபகாரம் உனக்குத் செய்தேன்? இதையெல்லாம் நாம் மனதில் வைத்துக்கொள்ள வெண்டும். ஆகையால், இன்னொருவனுக்கு அபகாரம் செய்ய வேண்டும் என்னும் எண்ணம் நம் மனதில் வந்தால், அது ஒரு பெரிய பாபம். அடுத்ததாக.

விததாSபினிவேசச்ச என்று சொல்லப்பட்டது.

"விததம்" என்பதற்கு “வீண்” என்று பொருள். "அபினிவேசம்” என்பதற்கு "பற்று" என்று பொருள். அது என்ன "வீண் பற்றுதல்" என்றால், நம்முடைய ஸித்தாந்தத்தின் மூலபூதமான தத்துவம் "கடவுள்" என்கிறோம். ஈச்வரன் இல்லையென்றால் உலகமே இல்லை. இறைவனில்லாவிட்டால், நம் கர்மாவின் பலத்தை நாம் அனுபவிப்பதற்கு முடியவே முடியாது. ஈச்வரனைப் பற்றிச் சொல்கின்ற போது அநேகம் பேருக்கு நம்பிக்கையே ஏற்படுவது இல்லை.

தர்க்க சாஸ்திரத்தில் புலமை வாய்ந்த ஒரு பெரிய மஹான் இருந்தார். அவர் பெயர் "உதயணாச்சாரியார்" என்பதாகும். ஈச்வான் உலகின் கர்த்தா என்பதை ஸ்தாபிப்பதற்காகவே அவர் பெரிய நூல் ஒன்றை எழுதினார். அந்த கிரந்தத்தின் முடிவில் அவர் ஒரு விஷயத்தைச் சொல்கின்றார்.

இத்யேவம் ச்ருதி நீதிஸம்ப்லவஜலைர்பூயோபிராக்ஷாலிதே
யேஷாம் நோபகமாததாஸிஹ்ருதயே தே சைலஸாராசயா: |
கிந்து ப்ரஸ்துத விப்ரதீபமதயோப்யுச்சைர் பவச்சிந்தகா:
காலே காருணிகத்வயைவ க்ருபயா தே ரக்ஷணீயா நரா: ||


Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita


## ஸத் ஸம்ப்ரதாயம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

"பகவானே! நீ இருக்கிறாய் என்பதை எத்தனையோ யுக்திகளையும் பிரமாணங்களையும் சொல்லி நிரூபணம் செய்தேன். இவ்வளவு சொல்லியும் நீ இருப்பதை சில கல் நெஞ்சக்காரர்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். ஆனால், அவர்களைப் பார்த்தாலும் என் மனதில் கருணைதான் உண்டாகின்றது. பகவானே! அவர்களையும் நீதான் காப்பாற்ற வேண்டும்! ஏனென்றால், அவர்கள் உனது நாமத்தை எப்போதும் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள், 'ஈச்வரன் இல்லை. ஈச்வரன் இல்லை" என்று சத்தமாகக் கூறிக் கொண்டு இருக்கும் போது, ஈச்வரன் என்னும் அந்த மூன்று அக்ஷரங்களைத் திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள். அதற்காகவாவது நீ அவர்களை அனுகாஹிக்க வேண்டும்" என்று உதயணாச்சாரியார் பகவானிடம் வேண்டுகிறார்.




நாம் எவ்வளவு பிரமாணங்களோடு தீர்மானமாக ஈச்வரனுடைய இருப்பினைப்பற்றிச் சொன்னாலும், "நான் நம்ப மாட்டேன்" என்று யாராவது சொன்னால், அப்பொழுது, அது அவனுடைய ஜென்ம பாபத்தின் மீதி என்று தான் நாம் நினைத்துக்கொள்ள வேண்டும் அதுதான் "விததாऽபினிவேச:" (வியர்த்தமான பற்றுதல்). அவர்கள், நீங்கள் சொல்வது எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது. மேலும் நீங்கள் சொல்வதைக் கண்டிக்க எங்களுக்கு வாதம் இல்லை. ஆனாலும், எங்கள் மனதில் ஈச்வரனைப் பற்றிய நம்பிக்கை வரவில்லை" என்கிறார்கள். இவ்வாறு சொல்வது வீண் பிடிவாதம். இத்தகைய பாபத்தை நாம் செய்யக் கூடாது.

இதேபோல் 'வேதசாஸ்திரங்கள் பற்றியும் அவை நமக்குச் சொல்லக்கூடிய தர்ம அதர்மங்கள் பற்றியும் நான் நம்பமாட்டேன்" என்று ஒருவன் சொன்னால், அதுவும் ஒரு பாபமாகும். பின்னர் ஒருவன் எதைத்தான் நம்புவான்? அவனவனுக்குப் பிரமாணமாகத் தோன்றியதைத்தான் அவனவன் செய்ய வேண்டும் என்றால், உலகில் ஒரு நியதியே இருக்காது. ஆகவே எல்லோருக்கும் பொதுவான ஒரு பிரமாணம் இருந்தால்தான் உலகில் ஒரு நியதி இருக்கும். அத்தகைய பிரமாணத்தைத்தான் நாம் வேதம், சாஸ்திரம் என்று சொல்லுகின்றோம். ஆகையால், "நான் வேத சாஸ்திரத்தை நம்ப மாட்டேன்" என்று சொல்வது ஒரு வியர்த்தமான பற்றுதல்.

"மறுபிறவி என்பதை நம்பவே மாட்டேன்" என்று சிலர் சொல்வார்கள்.

(தொடரும் …..)

ஸத் ஸம்ப்ரதாயம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஶ்ரீ ஸூக்தம்



26.தாமரையை விரும்புபவளே, தாமரை மகளே, தாமரையைக் கையில் ஏந்தியவளே, தாமரையில் வீற்றிருப்பவளே, தாமரையிதழ் போன்ற அகன்ற கண்களை உடையவளே, உலகிற்குப் பிரியமானவளே, விஷ்ணுவின் மனத்திற்கு உகந்தவளே உனது திருவடித் தாமரைகளை என் மீது வைத்தருள்வாய்!

27. யார் தாமரையில் வீற்றிருப்பவளோ, பருத்த பின் புறங்களை உடையவளோ, தாமரையிதழ் போன்ற கண்களை உடையவளோ, கம்பீரமான தொப்புள் உடையவளோ, மார்பகங்களின் பாரத்தால் தலைகுனிந்தவளோ, வெண்ணிறமான ஆடையும் மேலாடையும் தரித்தவளோ, ரத்தினங்கள் பதித்த பொற்கலச நீரைக் கொண்டு தேவலோகத்தின் சிறந்த யானைகளால் அபிஷேகம் செய்யப்படுபவளோ, தாமரையைக் கையில் தாங்கியவளோ, எல்லா மங்கலமும் நிறைந்தவளோ அந்த மகாலட்சுமி என் வீட்டில் என்றென்றும் வசிக்க வேண்டும்!

28. அதிர்ஷ்டத்திற்கு இருப்பிடமானவளும், பாற்கடலரசனின் மகளும், ஸ்ரீரங்கத்தில் உறைகின்ற தேவியும், தேவலோகப் பெண்கள் அனைவரையும் பணிப்பெண்களாகக் கொண்டவளும், உலகிற்கு ஒரே தீபமாக இருப்பவளும், யாருடைய மென்மையான கடைக்கண் பார்வையைப் பெற்றதால் பிரம்மனும் இந்திரனும் சிவபெருமானும் பெருமை பெற்றார்களோ அவளும், மூன்று உலகங்களையும் குடும்பமாகக் கொண்டவளும், தாமரைக் குளத்தில் தோன்றியவளும், மகாவிஷ்ணுவுக்குப் பிரியமானவளுமான உன்னை வணங்குகிறேன்.

(தொடரும்..)

For free e magazine Our Mail ID : Info@voiceofjagadguru.com

ஸத் ஸம்ப்ரதாயம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

## என்றும் புதியவர்

ஜகத்குரு சங்கராசார்யார் ஸ்ரீமத் அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள்


## 2. பேரறிவு (மஹாப்ரக்ஞை)

### மஹாப்ரக்ஞை - கல்வி சார் அறிவாற்றல்

ஆசார்யாளின் கல்வியறிவு மிகவும் ஆழமாக இருந்த போதும் அவருக்குத் தற்பெருமை சிறிதும் இருக்கவில்லை என்பதைக் கீழ்க்காணும் நிகழ்ச்சி காட்டுகிறது:

“... பெங்களூரில் நடந்த வித்வத் சபை ஒன்றில் பண்டிதர்கள், சங்கர பகவத்பாதர் 'மூல அவித்யை' என்ற கோட்பாட்டை ஏற்றாரா என்பது பற்றி விவாதித்தனர்; 'மூல அவித்யை' என்பது பரம்பொருளை நிலையிடமாகக் கொண்டு ஆத்மாவைப் பற்றிய சரியான அறிவை மறைக்கிறது. பத்மபாத ஆசார்யர் முதற்கொண்டு சம்பிரதாயத்தை அனுசரித்துப் பொருள் கூறிய வேதாந்திகள் பலரும், பகவத்பாதர் இந்தக் கோட்பாட்டை ஏற்றார் என்றே கூறினர். ஆனால் ஹொளே-நரஸிபுர மடாதிபதி ஸ்ரீ ஸச்சிதானந்தேந்திர ஸரஸ்வதீ ஸ்வாமிகளும் அவருடைய சீடர்களும் பகவத்பாதர் 'மூல அவித்யை கொள்கையை ஏற்கவில்லை என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர். அவர்களுடைய கருத்தின்படி, ஆழ்ந்த உறக்கத்தில் அவித்யையின் திரை இல்லை; மோக்ஷத்திற்கும் ஆழ்ந்த உறக்கத்திற்கும் உள்ள ஒரே வேறுபாடு, பின்னுள்ளது தற்காலிகமானது என்பதே. இந்த இரண்டு கட்சிகளும் வாதம் செய்து ஒரு முடிவிற்கு வரவேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த வித்வத் சபை ஏற்பாடு செய்யப்பட்டது. அவையில் நடந்த வாதப்பிரதிவாதங்களை ஆசார்யாள் மிகவும் ஊக்கத்துடன் கேட்டார். அங்குள்ள ஒருவர் ஆசார்யாளைப் பார்த்து, 'ஜகத்குரு என்ற ஸ்தானத்தில் இருக்கும் ஆசார்யாள் இதற்குத் தீர்ப்பளிக்கலாமே' என்றார். அதற்கு ஆசார்யாள் அளித்த பதில் மனதைத் தொடும் விதத்தில் இருந்தது. 'நான் இங்கே ஜகத்குருவாக அமரவில்லை. மாறாக, சாஸ்திரங்களைக் கற்பிக்கும் ஆசிரியன் என்ற முறையில் 'நான் சரியாகக் கற்றுள்ளேனா' என்று பார்த்துக் கொள்வதற்காக இங்கே அமர்ந்திருக்கிறேன்' என்றார் ஆசார்யாள். தர்க்க சாஸ்திரத்திலும் வேதாந்த சாஸ்திரத்திலும் அவருக்கு நிகரானவர் யாருமில்லை என்று ஆசார்யாள் அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் அவரிடத்தில் பாரபட்சமோ தற்பெருமையோ சற்றும் இல்லை. (அந்த அவையில் நடந்த வாதத்தில் சம்பிரதாயத்தை ஒட்டிப் பொருள் கூறிய வேதாந்திகள் பக்கமே வென்றது.)..."


### மஹாப்ரக்ஞை - கற்றறிந்த பண்டிதர்



# Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



## ஸத் ஸம்ப்ரதாயம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

கல்விசார் அறிவாற்றல் ஆசார்யாளிடத்தில் "சாஸ்திரங்களைப் பயில்விப்பவர்" என்ற ஆளுமையாக எப்படி விளங்கியது என்பதை இதுவரை பார்த்தோம். இனி, இவ்வாற்றல் அவரிடத்தில் “கற்றறிந்த பண்டிதர்" என்ற ஆளுமையில் எப்படி விளங்கியது என்பதைக் காண்போம்.




35th Sringeri Jagadguru
Sri Sri Abhinava Vidyatirtha Mahaswamiji

சிருங்கேரி மடத்தின் வரலாற்றைப் பார்க்கும் போது. இந்த பீடத்தின் அதிபதியாக இருந்தவர்கள் சாஸ்திர அறிவிற்கும் புலமைக்கும் மிகவும் முக்கியத்துவம் கொடுத்தனர் என்பது புலனாகிறது. பொதுவாக, சிருங்கேரி சங்கராச்சார்யார்கள் பண்டிதர்களாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் எல்லாத் தரப்பு மக்களுக்கும் இருந்தது என்பதையும் சாரதா பீடத்தின் வரலாற்றிலிருந்து ஒருவாறு ஊகிக்கலாம். சமீப காலத்து வரலாற்றில், சாரதா பீடத்தின் 33-வது பீடாதிபதியாக விளங்கிய ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகள் "மஹாகணபதி வாக்யார்த்த சபை” என்ற அமைப்பை நிறுவினார். ஆண்டிற்கு ஒரு முறை கூடும் இந்த அவை, சிருங்கேரி ஆசார்யார்கள் முன்னிலையில் நடக்கும். நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து வரும் அறிஞர்கள் கலந்து கொள்கின்றனர். இது தவிர, ஆசார்யர்கள் யாத்திரை செல்லும் போது, சில இடங்களில் பண்டிதர்களைக் கூட்டி வித்வத் சபை நடக்கும் வழக்கமும் உண்டு.

இம்மாதிரியான சபைகளில் வ்யாகரணம் (இலக்கணம்) தர்க்கம் (நியாயம்), பூர்வ மீமாம்ஸா, வேதாந்தம் ஆகிய தரிசனங்களில் உள்ள நுணுக்கங்களைப் பண்டிதர்கள் சர்ச்சை செய்வார்கள். சர்ச்சைக்கு ஒரு விஷயத்தை எடுத்துக் கொண்டு பண்டிதர் ஒருவர் தமது வாதங்களையோ ஆட்சேபங்களையோ கூறுவார். இதற்குப் பதில்களையோ வேறு ஆட்சேபங்களையோ கூடியிருக்கும் அறிஞர்கள் ஒவ்வொருவராகக் கூறுவர். இப்படி ஒரு விஷயத்தை நன்கு ஆராய்ந்து சபை ஒரு முடிவிற்கு வரும். அவைக்குத் தலைமை தாங்கும் ஆசார்யர் சில சமயங்களில் ஆட்சேபங்களைக் கூறுவார்; அல்லது வேறொருவர் கூறிய ஆட்சேபங்களுக்கு சமாதானம் சொல்லுவார். சில சமயங்களில் அவையில் கூடியுள்ள பண்டிதர்களுக்கு இடையே நடக்கும் சர்ச்சையில் இறுதியான முடிவை ஆசார்யர் கூற வேண்டியிருக்கும்.

(தொடரும்…..) மிக்க நன்றி : Centre for Brahmavidya

ஸத் ஸம்ப்ரதாயம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

## நீதி மஞ்ஜரீ



ஸ்ரீ ஞானானந்த பாரதீ ஸ்வாமிகள் இயற்றியது.

### அத்தியாயம் - 5
### ஆஹார சுத்தி

அமிருதத்தினுடைய ஸம்பந்தத்தினால் வைத்ய முறையில் அவைகளுக்குப் பலவித குணங்கள் இருப்பதாகக் காணப்பட்டபோதிலும், அஸுரனுடைய, அதிலும் எச்சிலின், ஸம்பந்தம் இருப்பதினால் நிஷித்தம் என்றே சொல்லப்படுகிறது. ஸ்த்ரீகளுக்கு பிரஸவத்திற்கு முன்னும் பின்னும் உள்ளிப்பூண்டை உபயோகப்படுத்துவதினால் அவர்கள் சில நாட்கள் வரை சுத்தமில்லையென்று சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளை எப்படியும் பிராஹ்மணர்கள் உபயோகப்படுத்தக் கூடாதென்பது ஸித்தம். இதுமாதிரி மற்ற நிஷித்த பதார்த்தங்களையும் விலக்க வேண்டியது அவசியம்.

ஸம்ஸர்க்கதுஷ்டம் என்பது பதார்த்தம் நல்லதாக இருந்தாலும், வேறொன்றுடன் சேரும்போது துஷ்டமாகும் என்பது தாத்பர்யம்.அந்த மற்றொன்று என்பது மனுஷ்யர்களாக இருக்கலாம், மிருகங்களாக இருக்கலாம், வேறு ஜடமான பதார்த்தங்களாகவும் இருக்கலாம். சேர்க்கை என்பது ஒன்றுக்கொன்று தொட்டுக் கொண்டிருக்க தான் வேண்டுமென்பதில்லை. ஸமீபத்தில் வந்தாலும், கண்ணால் பார்த்தாலும், வாயால் சொன்னாலும் கூட பதார்த்தம் துஷ்டமாகி விடும். ஒரு மாம்பழம் எவ்வளவு நல்லதாக இருந்தாலும், சாக்கடையில் விழுந்து விட்டால், அதை சுத்தமாக அலம்பி அதற்குள் சாக்கடை ஜலம் போகவில்லை என்று நிச்சயமாகத் தெரிந்தாலும், அது பிற்பாடு கிரஹிப்பதற்கு யோக்யதை இல்லை. அன்னம் முதலிய வஸ்துக்களை சில மனுஷ்ய ஜாதிகள் பார்த்துவிட்டாலே அவைகள் துஷ்டமாகிவிடுகின்றன. நாய், மூஞ்ஜூறு முதலிய சில பிராணிகள் அதன்பேரில் மூச்சுவிட்டால் அப்பொழுதும் துஷ்டமாகும்.




## ஸத் ஸம்ப்ரதாயம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)


ஒரு பிராஹ்மணனுக்கு அன்னம் போடும்படி சூத்ரரோ, பஹிஷ்டாஸ்திரீயோ, ஸன்யாஸியோ சொல்லிவிட்டால் அந்த அன்னம் துஷ்டமாகிவிடுகிறது. இது தவிர இரண்டு பதார்த்தங்களும் தோஷமில்லாமல் இருந்தபோதிலும், அவைகள் ஒன்றோடொன்று சேர்ந்துவிட்டால் துஷ்டமாகிவிடுகிறது. பால் தோஷமில்லை; உப்பு தோஷமில்லை; இரண்டையும் கலந்தால் தோஷம். உளுந்து தோஷமில்லை; தயிர் தோஷமில்லை; இரண்டையும் கலந்தால் தோஷம்.

வைத்ய சாஸ்திர ரீதியாகக் கூட இவை இரண்டையும் கலந்தால், புத்தி மங்கிவிடும் என்று கூறப்பட்டிருக்கிறது. ஒரு ஸமயம் அரசரிடம் ஒரு வித்வான் வந்து வெகு உத்தண்டமாக "காளிதாஸனிடம் நேருக்கு நேர் வாதம் செய்ய வேண்டும்" என்று கேட்டுக்கொண்டான். உடனே அரசன் காளிதாஸனுக்குச் சொல்லி அனுப்பினான். அந்த மஹாகவி உடனே புறப்படாமல் "கொஞ்சம் தாமதித்து வருகிறேன். வந்திருக்கும் வித்வானுடைய புத்தி நிலைக்கு ஏற்ப என் புத்தியை இறக்கிக்கொண்டல்லவா அவருக்கு ஸமானமாய் வாதம் செய்யலாம்? அதற்காகக் கொஞ்சம் தயிர்வடை சாப்பிட்டு வருகிறேன்" என்று சொல்லி அனுப்பினதாக ஒரு கதை உண்டு. இக்காலத்திலோ தயிர் வடையும், டாங்கர் பச்சிடியும் இல்லாத விருந்து கிடையாதென்று ஏற்பட்டுவிட்டது. சிராத்தத்தில் பிராஹ்மணர்களே மோர்குழம்பில் உளுந்து வடையை ஊரவைத்துச் சாப்பிடுவது ஸஹஜமாகிவிட்டது. இதெல்லாம் நிஷித்தம் என்கிற எண்ணமே போய்விட்டது.

ஆக்ருதிதுஷ்டம் என்பது பதார்த்தத்தைப் பார்க்கும்போதே நிஷித்தமான பதார்த்தத்தின் உருவம்போல் இருந்தால், அதுவும் துஷ்டம் என்பது தாத்பர்யம். ஆசாரமாயிருக்கிற குடும்பங்களில் வெள்ளையாய் உருண்டையாயிருக்கிற கத்திரிக்காயை உபயோகப்படுத்த மாட்டார்கள். அதைப் பார்க்கும்போது நிஷித்தமான கோழிமுட்டையின் ஞாபகம் வரும். இக்காலத்தில் கோழிமுட்டையையே சாப்பிட தைர்யம் கொண்டவர்களுக்கு இது நிஷித்தமாகவே தோன்றாது. இதேமாதிரி பக்ஷணங்கள் தயார் பண்ணுவதிலும் புழு மாதிரி, நாக்குப்பூச்சி மாதிரி, மீன் மாதிரி ரூபத்துடன் ஏதாவது பண்ணியிருந்தால் அதுவும் நிஷித்தமே ஆகும். அதிபரிசுத்தமான கோதுமையிலேயே செய்யும் பிஸ்கோத்து முதலிய பதார்த்தங்களுக்கு அனாவசியமாக மீன் முதலான ரூபங்களை ஏற்படுத்திக் குழந்தைகளுக்குக் கொடுத்து வழக்கம் பண்ணினால், வாஸ்தவமாகவே இருக்கும் மீனை சாப்பிடுவதற்கு ஒரு வாஸனையை ஏற்படுத்திக் கொடுத்ததாக ஆகும்.


(தொடரும் ...)

மிக்க நன்றி : ஸ்ரீ ஞானானந்த பாரதீ க்ரந்த ப்ரகாசன ஸமிதி



# Voice of Jagadguru

advaitam paramanandam — an e-magazine on advaita



## ஸத் ஸம்ப்ரதாயம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

# ||श्रीशारदास्तोत्रम्||

## श्रीशृङ्गाद्रौ श्रीशारदानवरात्रोत्सवसमये

## ஶ்ரீஶாரதா³ஸ்தோத்ரம்

## (ஸ்ரீ சிருங்க கிரியில் சாரதாநவராத்திரியின்போது)

(ஸ்ரீ சிருங்ககிரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகள் இயற்றியது)

निशम्य सम्प्रेषितवान्मयूरमुद्धर्ष इत्येव पितृष्वसुः किम् |
षडाननो ब्रूहि गिरां सवित्रि नम्रस्य सन्देहयुजो ममाशु ||२४||

நிஶம்ய ஸம்ப்ரேஷிதவான்மயூரமுத்³த⁴ர்ஷ இத்யேவ பித்ரு’ஷ்வஸு: கிம் |
ஷடா³னனோ ப்³ரூஹி கி³ராம்’ ஸவித்ரி நம்ரஸ்ய ஸந்தே³ஹயுஜோ மமாஶு ||

வாக்குகளைத் தோற்றுவிப்பவளே ! ஆறுமுகன் தன் அத்தைக்கு அதிக ஸந்தோஷத்தால் இந்த மயிலை (காணிக்கைப் பொருளாக) அனுப்பியுள்ளானோ! இந்த ஸந்தேகம் கொண்ட இந்த அடியானுக்கு விளக்கம் தருவாயோ? (24)

किं वर्णयामि तव सुन्दरतां मनुष्यो यत्सुन्दरत्वमभिवीक्ष्य मयूरपक्षी।
हित्वा विरूप इति षण्मुखमाशु मातः वासं करोति तव पादसरोजमूले ||२५||

கிம்’ வர்ணயாமி தவ ஸுந்த³ரதாம்’ மனுஷ்யோ யத்ஸுந்த³ரத்வமபி⁴வீக்ஷ்ய மயூரபக்ஷீ.
ஹித்வா விரூப இதி ஷண்முக²மாஶு மாத: வாஸம்’ கரோதி தவ பாத³ஸரோஜமூலே
||25||

தாயே ! மனிதனான நான் உன் அழகை எவ்வாறு வர்ணிப்பேன் ! உன் அழகைக் கண்ட மயில் பறவை, ஆறுமுகனை அழகற்றவன் என்று உடன் தவிர்த்து உன் தாமரை போன்ற சரணங்களின் கீழ் வசிக்கிறது.(25)

दृष्ट्वा त्वदीयकचसन्ततिनीलमेघं सर्वर्तुषूद्यनमेत्य मयूर एषः ।
नित्यप्रहर्षदतया विरहासहिष्णुः नूनं त्वदङ्घ्रिकटे स्थितिमातनोति ||२६||

த்³ரு’ஷ்ட்வா த்வதீ³யகசஸந்ததிநீலமேக⁴ம்’ ஸர்வர்துஷூத்³யனமேத்ய மயூர ஏஷ: .
நித்யப்ரஹர்ஷத³தயா விரஹாஸஹிஷ்ணு: நூனம்’ த்வத³ங்க்⁴ரிகடே ஸ்தி²திமாதனோதி
||26||

உனது கேசக்கற்றையாகிய கார்மேகம் எல்லாப் பருவங்களிலும் வெளியாவதைக் கண்டு எப்போதும் பெருமகிழ்ச்சி தருவதாயிருப்பதால் அதனை விட்டுப் பிரிவதைத் தாங்க வொண்ணாமல், உன் திருவடியருகிலேயே இந்த மயில் தன்னிருப்பைக் கொண்டுள்ளது. (26)

(தொடரும் ...)

For free e magazine Our Mail ID : Info@voiceofjagadguru.com

ஸத் ஸம்ப்ரதாயம்
(An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஸ்ரீமத் அத்யாத்ம ராமாயணம்

## அத்யாத்ம ராமாயணத்தின் பெருமையும் பயனும்

நாரத! ஸ்ரீராமகீதை எந்தப் பாவத்தை அழிக்கவில்லையோ, அப்படிப்பட்ட பாவம். உலகில், புண்ணிய தீர்த்தம் முதலியவற்றால் அழிவதில்லை; உலகில் நான் எப்போதும் சுற்றிப் பார்த்தும் அதைப் பார்த்ததில்லை. (ஸ்ரீராம கீதையால் அழிக்கப்பட முடியாத பாவம் உலகில் இல்லவே இல்லை). மனமகிழ்ச்சியோடு, ஸ்ரீராமன், உபநிஷத சாகரத்தைக் கடைந்தெடுத்து லட்சுமணனுக்கு வழங்கிய கீதாம்ருதத்தைப் பருகி மக்கள் தேவத்தன்மை அடைவார்களாக.



முன்னொரு காலத்தில், ஜமதக்னி முனிவரின் குமாரரான பரசுராமா. கார்த்த வீர்யார்ஜுனனைக் கொல்லும் பொருட்டு வில்வித்தையில் பயிற்சி பெறுவதற்காக மகாதேவரிடம் வந்தபோது, பார்வதி தேவி மிகவும் கவனத்துடன் ஸ்ரீராமகீதை பாராயணம் செய்வதை கேட்டுக் கேட்டு, விரைவில் மனத்தில் பதித்துக் கொண்டு, தானும் படித்து, நாராயண அம்சத்தை அடைந்தார்.

பிரும்மஹத்தி முதலான மகாபாதகங்களிலிருந்து விடுபட விரும்பும் மனிதன். ஒரு மாத காலம் ஸ்ரீராமகீதையைப் படித்தால் போதும், பாவத்திலிருந்து விடுபடுகிறான். தீயவழியில் பெறப்பட்ட தானம், தகாத இடத்தில் உணவு ஏற்றது, நிந்தனைப் பேச்சு ஆகியவற்றால் ஏற்படும் பாவம், ஸ்ரீராமகீதையைப் படிப்பதால் அழிந்து போய்விடும்.

சாலக்ராம சிலையின் முன்னாலோ, துளசி அல்லது அரசு ஆகியவற்றின் எதிரிலோ இல்லை துறவியர் முன்பாகவோ ஸ்ரீராமகீதையைப் படிப்பவர் அடையும் பயன் சொற்களுக்கு அடங்காதது.

சிராத்த காலத்தில், ஸ்ரீராமகீதையைப் பக்தியுடன் படித்து, அந்தணர்களுக்கு உணவளிப் பவரின் முன்னோர்கள் எல்லோரும் விஷ்ணுவின் பரமபதத்தை அடைகிறார்கள். இதில் சந்தேகம் என்பது துளி கூட இல்லை.

ஏகாதசியன்று உபவாசத்துடனும் புலனடக்கத்துடனும் இருந்து, துவாதசியன்று அகஸ்திய மரத்தின் அடியில் ஸ்ரீராமகீதையைப் படிப்பவர், சாட்சாத் ஸ்ரீராமனே

ஆவார்; எல்லாத் தேவர்களாலும் வணங்கப்படுவார். ஸ்ரீ ராம மூர்த்திக்கு இணையானது இந்த ஸ்ரீ ராமகீதை.

ஸ்ரீராமகீதையைப் பூரண நம்பிக்கையோடு படிப்பவர், தானம், தியானம், புனித நீர்நிலைகளில் மூழ்கி நீராடுதல் ஆகியன செய்யாவிட்டாலும், அளவற்ற நற்பயனை அடைவார்.

நாரத! நிறையச் சொல்லிக் கொண்டிருப்பானேன்? வேதம், ஸ்மிருதி, புராணம், இதிஹாஸம், ஆகமம் ஆகிய நூற்றுக்கணக்கான அறநூல்கள், ஸ்ரீஅத்யாதம ராமாயணத்தின் ஒரு சிறு பகுதிக்குக் கூட சமானமாக மாட்டா!' பிரும்மாவினால், சிறந்த முனிவராகிய நாரதருக்கு உபதேசிக்கப்பட்ட இந்த ஸ்ரீமத் அத்யாத்ம ராமாயண மகிமையை சிரத்தையோடு படித்தாலும் கேட்டாலும், அவர் தேவர்களால் கொண்டாடப்படும் விஷ்ணு பகவானின் பரமபதத்தை அடைகிறார்.

## பாலகாண்டம்

### முதலாவது ஸர்கம்

### ஸ்ரீராம ஹ்ருதயம்

சின்மய வடிவினராகிய எவர், 'மண்ணுலகத்தின் சுமையைக் குறைக்க வேண்டும்' என்று தேவர்களால் மிகவும் வேண்டிக் கொள்ளப்பட்டு, பூ மண்டலத்தில், சூரிய குலத்தில் மாய மனிதராகத் தோன்றி, அரக்கர் குலத்தையே முற்றிலுமாக அழித்து, பாவங்களை அழிக்கக்கூடிய தனது கீர்த்தியை உலகில் நிலைநிறுத்திவிட்டு, ஆதிமூலமாகவும் நிலையானதுமான தன்னுடைய பரப்பிரும்ம வடிவில் ஒன்றினாரோ. அப்படிப்பட்ட ஜானகீநாதனைப் போற்றுகிறேன்.

உலகத்தினைப் படைத்தல் - காத்தல் - அழித்தலுக்கு ஒரே காரணமாக இருப்பவர்; மாயைக்கு இருப்பிடமாயினும் அதற்குப் புறம்பானவர்; சிந்தனைக்கு எட்டாத வடிவினர்; ஆனந்தச் செறிவினர்; மாசுகள் அற்றவர்; சுயம்பிரகாசமாக விளங்குபவர்: தத்துவங்களால் அறியத் தக்கவருமான சீதாபதியை வணங்குகிறேன். எல்லாப் புராணங்களாலும் புகழ்ந்து பேசப்பட்ட அத்யாத்ம ராமாயணம் என்ற பெயர் கொண்ட இந்தக் காவியத்தை நாள்தோறும், சஞ்சலமில்லாத மனத்துடன், படிப்பவர்களும் கேட்பவர்களும், பாவங்களிலிருந்து விடுபட்டு பகவான் ஸ்ரீஹரியையே அடைகிறார்கள்.

(தொடரும்...)

For free e magazine Our Mail ID : Info@voiceofjagadguru.com

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்